**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066967

1. District மாவட்டம் : விழுப்புரம் PS காவல்நிலையம்: ஊ.த.க பிரிவு Year ஆண்டு: 2019 FIR No. மு.த.அ. எண்: 10/19 Date நாள்: 19.6.19

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act-1988 as Amended by Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: the Prevention of Corruption (Amendment) Act-2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 13.6.19 Date to நாள் வரை : —
Time Period : நேர அளவு
Time from நேரம் முதல் : 17.00 hours Time to நேரம் வரை : —
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time நேரம் : 18.6.2019 at 16.00 மணிக்கு புகார் கிடைத்து 17.6.2019ம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time நேரம் : தேதி காலை 10.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
18.6.2019 at 16.00 மணிக்கு புகார் மனு மற்றும் 19.6.2019 10.00 மணி எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
வடக்கு சுமார் 40 KM
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
வட்டாட்சியர் அலுவலகம், செஞ்சி தாலுக்கா
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்
— Nil —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S.R. வடிவேல்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S. ரங்கநாதன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 01.11.1978
(d) Nationality : நாட்டினம் இந்திய
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் விவசாயம்
(g) Address : முகவரி மின்னாம்பர் கோவில் தெரு, புலிப்பட்டு கிராமம், செம்மேடு (Post) செஞ்சி (TK) விழுப்புரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. கதிரவன், வட்டாட்சியர், செஞ்சி தாலுக்கா

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
வாதியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது. அய்யா, நான் நேற்று 18.06.2019ந்தேதி நிலைய அலுவலில் இருந்தபோது வாதி S.R.வடிவேல், என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று பின்னர் ரகசிய விசாரணை செய்து இன்று 19.06.2019ந்தேதி காலை 10.00 மணிக்கு விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண் 10/2019/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம், அனுப்புதல் S.R.வடிவேல், வயது 41, த/பெ.ரங்கநாதன், பிள்ளையார் கோவில் தெரு, புலிப்பட்டு கிராமம், செம்மேடு அஞ்சல், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம். பெறுதல், உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம்.அய்யா, நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சுமார் நான்கு ஏக்கர் நிலம் உள்ளது. என்னுடைய பெயரில் சுமார் 80 சென்ட் நிலமும், மற்றவை போக்கியத்தின் மூலம் அனுபவித்து வருகிறேன். இந்த நிலங்களில் நெல், கரும்பு, மணிலா போன்றவற்றை பயிர் செய்து வருகிறேன். அரசாங்க அறிவுப்புப்படி கிராமங்களில் உள்ள நீர்நிலைகளை பொது மக்கள் உதவியுடன் ஆழம் செய்து தூர் வாரும் பொருட்டு பொது மக்கள் சம்மந்தப்பட்ட வட்டாட்சியரிடம் சென்று அனுமதி பெற்று நீர்நிலைகளில் உள்ள வண்டல் மண்ணை எடுத்து விவசாயத்திற்கு பயன்படுத்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனது நிலம் செம்மேடு ஊராட்சி வீரமாநல்லூர் கிராம எல்லையில் உள்ளது. இந்த இடத்திற்கு செம்மேடு ஏரியில் இருந்து வண்டல் மண்ணை எடுத்து விவசயத்திற்கு பயன்படுத்த எண்ணி பழைய செம்மேடு VAO அவர்களிடம் சென்று எழுத்து மூலமான மனு, எனது நிலத்திற்கான சிட்டா ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். உடனே அவர் எனது மனு சம்மந்தமாக என்னை விசாரித்து எனது மனுவிலேயே கையொப்பமிட்டு

(Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி —………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| 14. Signature / Thumb Impression of the Complainant / Informant<br>குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /<br>பெருவிரல் இரேகைப் பதிவு | Signature of the Officer in-charge, Police Station<br>காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் |
| 15. Date & Time of despatch to the court:<br>நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் | Name: பெயர் …………………………<br>Rank: நிலை …………………No. எண் ……… |

பின்னர் மனுவை என்னிடம் கொடுத்து, செஞ்சி வட்டாட்சியரை நேரடியாக மனுவுடம் சந்திக்க சொன்னார். பின்னர் நான் செஞ்சி தாலுக்கா அலுவலகத்திற்கு சென்று (தேதி ஞாபகமில்லை) MP தேர்தலுக்கு முன்பு தாசில்தார் ஆதிபகவானிடம் மேற்படி மனுவை கொடுத்தேன். உடனே அவர் எனது மனுவை பெற்றுக்கொண்டு என்னிடம் தற்போது தேர்தல் சமயம் என்பதால் வண்டல் மண் எடுக்க அனுமதி வழங்க முடியாது ஆகையால் தேர்தல் முடிவுகள் வந்த பிறகு சந்திக்குமாறு அறிவுரை கூறி அனுப்பி வைத்தார். பின்னர் கடந்த மாதம் தேர்தல் முடிவுகள் வந்த பிறகு இரண்டொரு முறை தாசில்தார் ஆதிபகவான் அவர்களை தாலுக்கா அலுவலகத்தில் சந்திக்க முயற்சித்தேன் முடியவில்லை. கடந்த 08.06.2019 அன்று காலை செம்மேடு கிராம பெண் உதவியாளர் என்னை தொடர்புகொண்டு செம்மேடு VAO அலுவலகத்திற்கு செஞ்சி தாசில்தார் வண்டல் மண் எடுக்க அனுமதி அளிப்பது' தொடர்பாக விசாரணைக்கு வந்துள்ளார் என்றும் அவரை நேரடியாக வந்து சந்திக்குமாறு கூறினார். பின்னர் உடனே நான் 08.06.2019 அன்று காலை சுமார் 11.00 மணிக்கு VAO அலுவலகத்திற்கு சென்றபோது அங்கு VAO அலுவலகத்தின் உள்ளே தாசில்தார் அமர்ந்திருந்தார். வெளியே பெண் கிராம உதவியாளரும் எனக்கு தெரிந்த தாசில்தார் வாகன ஒட்டுநர் கந்தசாமியும் நின்றுகொண்டிருந்தார்கள். நான் நேரடியாக தாசில்தார் அவர்களிடம் சென்று எனது நிலம் தொடர்பான ஆவணங்களை காட்டினேர். உடனே அவர் எனது ஆவணங்களை பார்த்துவிட்டு ஒரு வாரம் கழித்து செஞ்சி தாலுக்கா அலுவலகத்திற்கு வந்து தன்னை நேரடியாக சந்திக்குமாறு கூறி என்னை அனுப்பி வைத்தார். அப்போது மேற்படி அறையில் பொது மக்கள் யாருமில்லை. உடனே நான் VAO அலுவலகத்தைவிட்டு வெளியே வந்தபோது தாசில்தார் வாகனத்தில் தனியாக அமர்ந்திருந்த ஒட்டுநர் கந்தசாமி என்னை அழைத்து என்வென்று கேட்டார். நான் நடந்த விபரத்தை சொன்னேன். உடனே கந்தசாமி என்னிடம் தாசில்தார் ஏதாவது பணம் கேட்பார், அடுத்த வாரம் நீ தாலுக்கா அலுவலகம் வரும்போது என்னை வந்து பார், நான் தாசில்தாரிடம் சொல்லி பணத்தை குறைச்சி வண்டல் மண் எடுக்க அனுமதி வாங்கித்தறேன் என்று சொன்னார். உடனே நான் அவரிடம் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் கடந்த 13.06.2019 அன்று மாலை சுமார் 05.00 மணிக்கு செஞ்சி தாலுக்கா அலுவலகம் சென்று தாசில்தாரை அவரது அலுவலக அறையில் சந்தித்தபோது என்னிடம் அவர் வண்டல் மண் எடுக்க உனக்கு நான் அனுமதி கொடுக்க வேண்டுமென்றால் எனக்கு ரூபாய். 10,000/- லஞ்சமாக பணம் கொடு நான் உடனே மண் எடுக்க அனுமதி தருகிறேன் என்று சொன்னார். உடனே நான் அவரிடம் சார் என்னிடம் அவ்வளவு பணம் கிடையாது, அதுவும் வண்டல் மண் எடுக்க நீங்க கேக்குற பணம் அதிகமா இருக்கு என்று சொன்னேன். உடனே அவர் சிறிது நேரம் யோசித்துவிட்டு என்னை பார்த்து கடைசியா எனக்கு ரூபாய்.8,000/- பணம் கொடுத்தால்தான் உனக்கு வண்டல் மண் எடுக்க அனுமதி கொடுப்பேன். இல்லை என்றால் தரமாட்டேன், 8,000/- பணத்துடன் வந்து என்னை பாரு, ஒசியில வேல நடக்காது என்று கூறினார். உடனே நான் அவரிடம் பணத்துடன் வந்து சந்திப்பதாக கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து நான் யோசித்து பார்த்ததில் எனது விவசாயத்திற்கு வண்டல் மண் எடுக்க தாசில்தார் ஆதிபகவானுக்கு லஞ்சமாக ரூபாய்.8,000/- பணம் கொடுக்க விருப்பமில்லை. பின்னர் எனது உறவினருக்கு உடல்நிலை சரியில்லை என கேள்விப்பட்டதால் அவரை பார்க்க ஊருக்கு சென்றுவிட்டேன். பிறகு இன்று (18.06.2019) வந்து புகார் கொடுக்கிறேன். நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd) S.R.வடிவேல் 18.6.19. அய்யா, நான் இன்று 18.06.2019ந்தேதி 16.00 மணிக்கு வாதி S.R.வடிவேல் என்னிடம் கொடுத்த மேலே கண்ட புகார் மனுவை பெற்று, புகார் மனுவின் உண்மை தன்மையை கண்டறிய சம்பவ இடம் புறப்பட்டு செல்கிறேன் (Sd) ந.தேவநாதன் 18.06.2019. அய்யா, இன்று 19.06.2019ந்தேதி காலை 08.00 மணிக்கு நிலயம் வந்தேன். என்னுடைய ரகசிய விசாரணையில் மேலே கண்ட புகாரில் பிடிக்கக்கூடிய வழக்கு பதிவு செய்யக்கூடிய குற்ற முகாந்திரம்

இருந்ததால் விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண் 10/2019/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. (Sd) ந.தேவநாதன் 19.06.2019. இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல் நகலுடன் வாதி கொடுத்த புகார் மனுவை இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகள், விழுப்புரம் அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. (Sd) ந.தேவநாதன் 19.06.2019.

(ந.தேவநாதன்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்.